Chapter *XXIII Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.31/2026 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.2 |
| | | Defence | |
| Name | | திரு.சபரிஷ் | |
| Father's Name | : | திரு.வரதராஜன் | |
| Village | : | சுத்தமல்லி | |
| Taluk | : | திருநெல்வேலி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 23 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30th day of June 2026.

(எதிரி ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது சுத்தமல்லியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் வேல்முருகன், செல்வக்குமார் ஆகியோர்களை தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை

செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 28.09.2025ம் தேதி காலை 9.00 மணிக்கு சுத்தமல்லி சமுதாயக்கூடம் அருகில் அ.சா.1 வேல்முருகன் நின்றுகொண்டிருந்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த எதிரியை பார்த்து நீ யாரப்பா, ஊருக்கு புதியதாக இருக்கிறார் என்று கேட்டார் என்றும், அதற்கு எதிரி அவரை பார்த்து நான் இங்கே நின்ன உனக்கு என்னலே, உன் வேலையை பார்த்துத்திட்டு போலே தேவடியா மவனே என்று அசிங்கமாக பேசினார் என்றும், அதற்கு வேல்முருகன் யாரேன்று தானே கேட்டேன் என்றும், உடனே எதிரி அவரது முதுகில் சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வேல்முருகனை பார்த்து எதிர்த்து பேசிகீற நீ உயிரோடு இருக்கக்கூடாது இத்தோடு சாவுலே என்று வேல்முருகன் கழுத்தை பார்த்து ஓங்கி வெட்டினார் என்றும், வேல்முருகன் சற்று குனிந்து கொண்டதால் எதிரி வெட்டிய வெட்டு அவர் கழுத்தில் படவில்லை என்றும், இந்த சம்பவத்தை பார்த்த நான், செல்வக்குமார் ஆகியோர்கள் சத்தம்போடவே எதிரி வேல்முருகனை பார்த்து இன்றைக்கு நீ தப்பித்துவிட்டாய், என்னைக்கு நாளும் நான் உன்னை வெட்டிகொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்து சென்றுவிட்டார் என்றும் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேல்முருகன் புகார் மனு கொடுத்தார் என்றும் தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.